செய்தி எண்: 47 நாள்: 17.5.17

## பத்திரிக்கை செய்தி

பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு பொது மக்களின் சொந்த நோக்கத்திற்காகவும், விவசாய நிலங்களில் தரத்தை மேம்படுத்தும் வகைக்கும், மண்பாண்ட தொழிலாளர்களது நலனை கருத்தில் கொண்டும் திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுபணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறை பராமரிப்பில் உள்ள குளம், கண்மாய் மற்றும் கால்வாய் ஆகிய நீர் தேக்கங்களில் படிந்துள்ள வண்டல் மண், சவுடு, களிமண் மற்றும் கிராவல் ஆகிய கனிமங்களை விவசாயம், மண்பாண்டம் மற்றும் சொந்த பயன்பாட்டிற்காக கட்டணமில்லாமல் வெட்டி எடுத்து பயன்படுத்துவதற்கு தமிழக அரசால் திருத்திய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாணையின் அடிப்படையில் பொது மக்கள் சொந்த பயன்பாட்டிற்காக 30 கனமீட்டர் (10 டிராக்டர் லோடு) அளவும், மண்பாண்ட தொழிலுக்காக 60 கனமீட்டர் (20 டிராக்டர் லோடு) அளவும் மற்றும் விவசாய பயன்பாட்டிற்காக நஞ்சை நிலங்களை மேம்படுத்தும் வகைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 1 ஏக்கர் நிலத்திற்கு 75 கனமீட்டர் (25 டிராக்டர் லோடு) அளவும் புஞ்சை நிலங்களை மேம்படுத்துவதற்காக 1 ஏக்கர் நிலத்திற்கு 90 கனமீட்டர் (30 டிராக்டர் லோடு) அளவும், கட்டணமில்லாமல் வெட்டி எடுத்து பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சலுகையினை பயன்படுத்தி பொது மக்கள், மண்பாண்ட தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்களது போக்குவரத்து செலவினை தவிர்க்கும் நோக்குடன், விவசாயிகள் தங்களது நிலத்தின் தரத்தினை மேம்படுத்தும் வகைக்கு தங்களது கைவசம் உள்ள நிலம் தொடர்பான பட்டா, 10 (1) சிட்டா அடங்கல், மற்றும் புலப்படநகல் ஆகியவற்றுடனும், மண்பாண்ட தொழிலாளர்கள் தொழில் நடத்துவதற்கான ஆதாரம் மற்றும் சான்றுகளுடனும், சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்களிடமே உரிய மனுவுடன் விண்ணப்பிக்கலாம் என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

17.5.17

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி

17.5.17

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி